தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## விவசாயத்தில் ஆர்வம் காட்டும் பெண்கள்

கூடலூர் : கூடலூர் பகுதியில், பெண்களும் விவசாயத்தில் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர்கூடலூர் பகுதியில் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் ., பெரும்பாலன விவசாயிகள் தாங்களே விவசாய பணிகளில் ஈடுப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு உதவியாக வீட்டிலுள்ள பெண்களும் ஓய்வு நேரத்தில் விவசாயத்தில் ஆர்வத்துடன் ஈடுப்பட துவங்கியுள்ளனர்அவர்கள் கூறுகையில் ., "தற்போதைய விவசாய விளை பொருள்களின் உற்பத்தி செலவு நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. இதனால், ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில், வீட்டில் உள்ளவர்களே குறிப்பாக பெண்களும் விவசாய பணிகளிலும் ஈடுப்பட சூழல ஏற்பட்டுள்ளது' என்றனர்.

## விவசாயத்துறையில் பயிர் விளைச்சலை அதிகரிக்கும் பாலித்தீன் நிலப்போர்வை''':

தேனி : விவசாயத்துறையில், விளைச்சலை அதிகரிக்கும் பாலித்தீன் நிலப்போர்வை''' திட்டத்தில், சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். வறட்சியின் பாதிப்பு அதிகரித்து, வெயில் அதிகமாக உள்ளதால், விவசாய மற்றும் தோட்டக்கலைத்துறையில் தற்போது புதிய தொழில்நுட்பம் கடைபிடிக்கப்படுகிறது. நிலம் முழுவதும் கருப்பு கலர் பாலித்தீன் பாய் விரித்து நிலத்தை முழுமையாக மூடி விட்டு, பயிர் சாகுபடிக்கு மட்டும் அதில் துளையிட்டு விதை, அல்லது செடி, கிழங்கு நடவு செய்யப்படுகிறதுசெடி வளரும் இடம் தவிர ., மற்ற இடம் முழுக்க பாலித்தீன் போர்வையால் மூடப்பட்டு விடுகிறதுஇந்த போர்வைக்கு . உள்ளேயே சொட்டுநீர் பாசன கருவிகளும் அமைந்துள்ளனஉத்தமபாளையம் ., தேவாரம், ஓடைப்பட்டி பகுதிகளில் வாழை, தர்பூசணி சாகுபடிக்கு இந்த வகை தொழில்நுட்பம் அதிகம் பயன்படுத்தப்படுகிறது:தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது . நிலத்தில் விரிக்கும், பாலித்தீன் போர்வையை இரண்டு சாகுபடிக்கும் பயன்படுத்த முடியும்இந்த . .போர்வை காலப்போக்கில் உதிர்ந்து தூளாகி விடும் எனவே நிலத்திற்கு பாதிப்பில்லை . போர்வை விரிப்பதால் நிலத்தின் ஈரப்பதம் பாதுகாக்கப்படுகிறதுபோர்வையின் கீழ் .

வெப்பம் அதிகம் இருப்பதால் களைகள் முளைப்பதில்லைஇதனால் நிலத்திற்கு . வழங்கப்படும் உரம் உட்பட எல்லா சத்துக்களும் நாம் சாகுபடி செய்யும் பயிருக்கு கிடைக்கும்இதனால் . விளைச்சல் அதிகரிக்கிறதுஇந்த நிலப்போர்வை விரிக்க அரசு . மானியம் வழங்குகிறது, என்றனர்.

<u>பதனீரை குடிக்கும் தேனீக்கள்; பாதிப்பில் ஸ்ரீவி., விவசாயிகள்:</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில், குறைந்தளவு பதனீரையும், தேனீக்கள் குடித்து விடுவதால், விவசாயிகள் திண்டாடுகின்றனர்ஸ்ரீவில்லிபுத்தூர் ., மம்சாபுரம், திருவண்ணாமலை, செண்பகதோப்பு பகுதிகளில், 50 ஆயிரத்திற்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளனஇதை நம்பி ., ஏராளமான தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்பனை மரங்களிலிருந்து ., ஆண்டு தோறும் தை முதல் ஆடி வரை, பதனீர் உற்பத்தியாகும்இதன் மூலம் ., தினமும் 50 ஆயிரம் லிட்டருக்கு அதிகமாக பதனீர் கிடைக்கும்பதனீரை ., ஸ்ரீவில்லிபுத்தூர் பனை பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், கொள்முதல் செய்கிறதுஇவ்வாறு கொள்முதல் செய்யப்படும் . பதனீரை பதப்படுத்தி, 200 மி.லி., பாக்கெட்களில் நிரப்பி, விருதுநகர், மதுரை, கோவில்பட்டி போன்ற இடங்களுக்கு, விற்பனை செய்யப்படுகிறதுதனியார் . சிலர், பதனீரை கொண்டு, கருப்பட்டி உற்பத்தி செய்து வருகின்றனர்.ஸ்ரீவி ., பகுதிகளில், கடந்தாண்டு சரி வர மழை பெய்யவில்லைஜனவரியில் துவங்க வேண்டிய. பதனீர் உற்பத்தி, இந்தாண்டு பிப்ரவரி வாரத்தில் தான் துவங்கியதுசீசன். துவங்கியும், விவசாயிகள் எதிர்பார்த்த அளவு பதனீர் உற்பத்தி அதிகரிக்கவில்லைஇதற்கு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக இருந்தாலும் ., தற்போது பதனீரை குடிக்க படையெடுத்து வரும் தேனீக்கள் கூட்டத்தால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்தேனீக்களை தடுக்க ., விவசாயிகள் பதனீர் கலயங்களை சுற்றி, துணி, சாக்குபைகளை வைத்து கட்டியும், தேனீக்கள் நுழைந்து, பதனீரை குடித்து செல்கிறதுவிவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு . வருகின்றனர்விவசாயி மாடசாமி.,"" ஸ்ரீவி.,யில், போதிய மழை இல்லாததால், பனை மரங்களில் பாளைகள் சரியாக விடாமல், பதனீர் உற்பத்தி குறைந்து உள்ளது. தேனீக்கள், பனை மரத்தில் கட்டப்பட்டுள்ள கலயங்களில் புகுந்து, பதனீரை குடித்து வருவதால், கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது,"என்றார்.

திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**<u>பல்லடம் கறிக்கோழி கொள்முதல் விலையில் மாற்றமில்லை</u>**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 63-ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் புதன்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.42, சென்னையில் ரூ.2.75.

**<u>அவிநாசியில் ரூ. 55 லட்சத்திற்கு பருத்தி ஏலம்</u>**

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ. 55 லட்சத்திற்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.

ஏ.சி.எம்.எஸ். ஏல மைத்தியத்தில் நடைபெற்ற இந்த ஏலத்திற்கு 3,200 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. குவிண்டால் ஒன்றுக்கு டி.சி.ஹெச். ரகப் பருத்தி ரூ. 5,700 முதல் ரூ. 6,300 வரையிலும், ஆர்.சி.எச். ரகப் பருத்தி ரூ. 4,800 முதல் ரூ. 5,365 வரையிலும், மட்ட ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2,700 முதல் ரூ. 3,000 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ஒரு கோடியே ரூ. 55 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இதில் குன்னத்தூர், செங்கப்பள்ளி, சேலம், திருப்பத்தூர், ஆத்தூர், மேட்டூர், தர்மபுரி, பொம்மிடிப்பூண்டி, அந்தியூர், குண்டடம், கிணத்துக்கடவு, அன்னூர், கோபி, நிச்சாம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 316 பருத்தி விவசாயிகளும், 12 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர். அறுவடை குறைந்ததால், ஏலத்திற்கு சென்ற வாரத்தைவிட 1,200 மூட்டைகள் குறைவாகவே வந்திருந்தன.

**தக்காளி விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

கடந்த சில நாள்களாக சந்தையில் தக்காளியின் விலை படிப்படியாக உயர்ந்து வருவதால், கிருஷ்ணகிரி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் ஆண்டு முழுவதும் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக தளி, தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை, ஒசூர், சூளகிரி, வேப்பனஅள்ளி ஆகியப் பகுதிகளில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ராயக்கோட்டையில் செயல்படும் தனியார் தினசரி சந்தையின் மூலம் கொள்முதல் செய்யப்படும் தக்காளி, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், மகராஷ்ரம், கேரளம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிறது.

நிகழாண்டில், வழக்கத்தை விட தக்காளி உற்பத்தி அதிகமாக இருந்தது. இதனால், கடந்த டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை கிலோ ரூ.3-க்கு விற்பனையானது. விலை சீராக இருந்தபோதும், உற்பத்தி செலவு அதிகரிப்பால் விவசாயிகளுக்கு போதிய லாபம் கிடைக்க வில்லை. தொடர்ந்து, கடந்த மாதம் சீஸன் உச்சத்தில் இருந்ததால், உற்பத்தி அதிகரித்தது. இதனால், விலை கடும் வீழ்ச்சியடைந்தது.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக உற்பத்தி குறைந்ததை அடுத்து, மீண்டும் விலை உயர்ந்து வருகிறது. கிருஷ்ணகிரி உழவர் சந்தையில் கடந்த 1-ஆம் தேதி, ஒரு கிலோ தக்காளி ரூ.4 ஆக இருந்தது. அது படிப்படியாக ரூ.5, ரூ.6, என உயர்ந்து, தற்போது ரூ.12-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த மாதங்களில் 5 டன்னாக இருந்த வரத்து தற்போது படிப்படியாக குறைந்து 3 டன்னாக குறைந்துள்ளது. இனி வரத்து மேலும் குறையும் என்பதால், இன்னும் ஒரு மாதத்தில் தக்காளியின் விலை ரூ.25-யை எட்டலாம் என வியாபாரிகள் எதிர்பார்கின்றனர்.

இதுகுறித்து ராயக்கோட்டை விவசாயி கோவிந்சாமி (56) கூறியது: கடந்த மாதங்களை விட தற்போது தக்காளி விலை உயர்வு மகிச்சியளிக்கிறது என்றார்.

**இயற்கை விவசாயத்தை நம்மாழ்வார் விவசாய முறை என அறிவிக்க வலியுறுத்தல்**

இயற்கை விவசாய முறைக்கு நம்மாழ்வார் பெயரை அறிவிக்க வேண்டுமென இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் பிறந்த நாள் விழாவையொட்டி ரோஸ் இயக்குநர் ஆதப்பன் தலைமையில் புதுக்கோட்டை செல்வாநகரில் உள்ள நம்மாழ்வார் பயிற்சிக் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இயற்கை விவசாயிகள் எழுச்சி தின கூட்டதத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், நம்மாழ்வார் மக்களிடம் எடுத்துச் சென்ற பணிகள் காலம் போற்றக்கூடியவை. குழந்தைகள், இளைஞர்கள், வல்லுநர்கள், அறிஞர்கள், இயற்கை விவசாயிகள் அனைவரிடத்திலும் எழுச்சியை ஏற்படுத்தியவர். அவரது முக்கியக் கொள்கையான, கிராமங்களை வாழும் கிராமங்களாக உருவாக்க வேண்டும் என்றும், இயற்கை விவசாய முறைகள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதையும் தீவீரமாக மக்களிடம் எடுத்துச் செல்வது. இயற்கை வேளாண் முறையை நம்மாழ்வார் வேளாண் முறை என அரசு பெயர் சூட்ட வேண்டும். மாவட்டத்தின் வளர்ச்சிக்காக அவர் கூறிய காடு வளர்ப்பு, பாரம்பரிய மூலிகை வளர்ப்பு, பாரம்பரிய மருத்துவம், பாரம்பரிய பயிர் வகைகள் பாதுகாப்பு, பாரம்பரிய கால்நடை வளர்ப்பு, நீரைச் சேமித்து நிலத்தடி நீரைப் பாதுகாத்தல், மக்கள் பங்கேற்புடன் நீராதாரங்களை தூர்வாரி பாதுகாத்தல் போன்ற பணிகளை முன்னெடுத்துச் செல்வது. ஏப்ரல். 30 வரை, மாணவர்கள், விவசாயிகள், மகளிர் குழுக்கள் மத்தியில் நம்மாழ்வார் ஆற்றிய சொற்பொழிவுகளை குறும்படங்கள் மூலமாக பிரசாரம் செய்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், இந்திய விவசாயிகள் சங்கத் தலைவர் ஜி.எஸ். தனபதி, மருத்துவர் எஸ். ராமதாஸ், கம்பன் கழகத் தலைவர் ராமையா, கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கச் செயலர் சி. அப்பாவு பாலாண்டார், இளங்கோவடிகள் இலக்கிய மன்றச் செயலர் மு. ராமுக்கண்ணு, மாநில காங்கிரஸ் பொதுச்செயலர் ஏ. சந்திரசேகரன் ஆகியோர் பங்கேற்றுப் பேசினர்.

நிர்வாகி ஆர். சிவக்குமார், நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அலுவலர் எஸ். சோமசுந்தரம், விவசாயிகள் நல்லிப்பட்டி முத்துச்சாமி, ஆரணிப்பட்டி பழனிவேலு, உழவர் மன்றத் தலைவர் பொன். சுந்தரேசன், இயற்கை விவசாயிகள் கணேசன், வேலாயுதம், முத்துக்கருப்பன், அன்பழகன், மருதச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பி.ஆர்.எம் இயக்குநர் ஜீவானந்தம் நன்றி கூறினார்.

**<u>நெற்பயிரைத் தாக்கும் இலைச்சுருட்டு புழுக்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் :</u>**

திருச்செந்தூர் வட்டத்தில், நெற்பயிரில் பரவலாக காணப்படும் இலைச் சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்த, யூரியா உரத்தை அளவுக்கதிகமாக இடக்கூடாது என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து திருச்செந்தூர் வேளாண் உதவி இயக்குநர் பிரம்மநாயகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஆறுமுகநேரி, காயல்பட்டினம், வன்னிமாநகரம், செந்தாமரைவிளை, சோனகன்விளை உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்களில் அதிகமான தழைச்சத்து உரமான யூரியா, அம்மோனியம் குளோரைடு போன்ற உரங்களை அளவுக்கு அதிகமாக பயிர்களுக்கு இடுவதால் இலைச்சுருட்டுப் புழுக்கள் அதிகமாகி நெற்பயிறைத் தாக்கும் வாய்ப்புள்ளது.

இலைச்சுருட்டுப் புழு தாக்குதல் அறிகுறிகள்: இப்புழுக்கள் நெற்பயிரின் இலைகளை சுருட்டிக்கொண்டு இலையில் உள்ள பச்சையத்தை சுரண்டி சாப்பிடும் அல்லது நெல் பயிரின் இரண்டு இலைகள் ஒன்றுக்கொன்று ஒட்டிக்கொண்டு பச்சையத்தை சுரண்டி சாப்பிடும். இலைச்சுருட்டுப் புழுத் தாக்குதல், நெல் நடவு செய்தபின் தூர் கட்டும் பருவம், பொதிப் பருவம் ஆகிய இரண்டு பருவங்களில் தாக்கும் வாய்ப்பு உள்ளது.

இலைச்சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறை: நெற்பயரில் இலைச்சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த, யூரியா உரம் குறைத்து இடவேண்டும் அல்லது பிரித்து இடவேண்டும். மேலும் கீழ்க்கண்ட பூச்சி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

மேலும், இலைச்சுருட்டுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த, மானோகுரோட்டாபாஸ் - 2 மில்லி (ஒரு லிட்டர் தண்ணீர் சேர்க்க வேண்டும்) அல்லது குளோரோபைரிபாஸ் - 2.5 மில்லி (ஒரு லிட்டர் தண்ணீர் சேர்க்க வேண்டும்) அல்லது குயினல்பாஸ் - 2 மில்லி (ஒரு லிட்டர் தண்ணீர் சேர்க்க வேண்டும்) இவற்றில் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>மீனவர்கள் வலையில் சிக்கும் மத்தி மீன்கள் :</u>**

காரைக்காலில் அண்மைக்காலமாக மத்தி மீன்கள் அதிகளவில் மீனவர்கள் வலையில் சிக்குகின்றன. இவை கேரளம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு அதிகளவு அனுப்பப்படுவதால், நல்ல வருவாய் கிடைப்பதாக மீனவர்கள் உற்சாகமடைந்துள்ளனர்.
மார்ச், ஏப்ரல் மாதங்களில் மத்தி மீன்கள் காரைக்கால் உள்ளிட்ட கடல் பகுதியில் கிடைக்கக் கூடிய சீசனாகும். கரையிலிருந்து சுமார் 2, 3 கி.மீ. தொலைவிலேயே கூட்டம் கூட்டமாக இவை உலாவிக் கொண்டிருக்கும். கடந்த சில தினங்களாக கடலுக்குள் செல்லும் மீனவர்கள் படகு நிறைய மத்தி மீன்களுடன் கரை திரும்புகின்ரனர்.
காரைக்கால் மாவட்டத்தில் மண்டபத்தூர் உள்ளிட்ட சில கிராம மீனவர்கள் மட்டுமே இந்த மீனை பிடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இவர்கள் அந்த கிராமத்திற்கு மீன்களை இறக்கும்போது, கேரளம் உள்ளிட்ட பகுதியிலிருந்து வரும் முகவர்கள் லாரிகளில் மீன்களை ஏற்றிச் செல்கின்றனர். மத்தி மீன் சீசன் மீனவர்களுக்கு லாபத்தை தரக்கூடியதாக உள்ளதாக மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மீனவர்கள் தெரிவித்தது: ஆண்டில் 2 மாதங்கள் மட்டுமே நாகை, காரைக்கால், கடலூர் வரையிலான பகுதியில் மத்தி மீன்கள் கிடைக்கும். இந்த மீனை கேரள மக்கள் விரும்பி சாப்பிடுகின்றனர். ஒரு பைபர் படகு மீன் ரூ. 20 ஆயிரம் முதல் ரூ. 30 ஆயிரம் வரை முகவருக்கு விற்கப்படுகிறது என்றனர்.

தினகரன்

**களை கட்டும் நெல் அறுவடை நவீன வசதிகள் கிடைக்குமா?**

பதிவு செய்த நேரம்:2014-04-09 10:42:42

கடலூர் : கட லூர்-குறிஞ்சிப்பாடி பகுதியில் நெல் அறுவடை களை கட்டியுள்ள நிலையில் நெல் கொள்முதல், சாலை வசதி, நவீன நெல் கிடங்கு உள்ளிட்ட வசதிகள் கிடைக்குமா என தேர்தலில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களிடம் விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

தமிழகத்தில் கோடை வெயிலை விட தேர்தல் ஜூரம் மும்முரமாக அனல் வீசி வருகிறது. இந்த நிலையில், வேட்பாளர்கள் அள்ளித் தெளிக்கும் வாக்குறுதிகளுக்கும் பஞ்சமில்லை. ஆனால், அவர்களிடம் கடலூர்- குறிஞ்சிப்பாடி பகுதியில் நெல் அறுவடை செய்து வரும் விவசாயிகள் விடுக்கும் கோரிக்கை, அவர்களை திசை திரும்ப செய்துள்ளது. குறிஞ்சிப்பாடி பெருமாள் ஏரிக்கரை மற்றும் அதைச் சார்ந்த பகுதியில் உள்ள கிராமங்களில் பொன்னி நெல் அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு கூடுதல் மகசூல் கிடைத்துள்ள போதிலும் கிராமப்பகுதிகளுக்கு போதிய சாலை வசதி இல்லாததால் அறுவடை செய்யப்படும் நெல்லை அரசு கொள்முதல் நிலையம் அல்லது ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் தனியார் நெல் அரவை மற்றும் அரிசி ஆலை தரப்பினருக்கு அறுவடை செய்யப்படும் நெல் விற்பனை அமைந்துள்ளது. இது போன்று கடலூர் பகுதி கிராமங்களிலும் இது போன்ற நிலை உருவெடுத்துள்ளது. இதையடுத்து பிரசாரத்தில் ஈடுபட்ட அதிமுக வேட்பாளர் அருண்மொழித்தேவன், தேமுதிக ஜெயசங்கரிடம் விவசாயிகள் தங்கள் பகுதியில் வாய்க்கால் தூர்வாரப்பட வேண்டும்.

அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கிராமங்களில் அமைக்க வேண்டும். சாலை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ஓட்டு வேட்டை நடத்தி வரும் நிலையில் எம்பி ஆனதும் முதல்வர் ஜெயலலிதாவிடம் முறையிட்டு வசதிகள் செய்து கொடுப்பதாக அதிமுக தரப்பும் உறுதி கூறி விடைபெற்றது.

தேமுதிக வேட்பாளர் ஜெயசங்கர் நாட்டின் விவசாயம் உலக அரங்கில் முதலிடமும், விவசாயிகள் வாழ்வு மலரவும் பாஜ தலைமையிலான தேசிய ஜனநாயக அரசு அமைந்தவுடன் கோரிக்கைக்கு தனாக விடை கிடைக்கும் என விவசாயிகளுக்கு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இப்படி தேர்தல் நேரத்தில் தான் கோரிக்கைகளுக்கு தீர்வு காண முடியும் என விவசாயிகள் வேட்பாளர்களின் பிரச்சாரத்தை பயன்படுத்தி கொள்வது தேர்தல் களத்தில் விறுவிறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

**நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் ரத்து தேர்தல் முடியும் வரை நடக்காது என தகவல் தேர்தல் கமிஷன் கெடுபிடி**

பதிவு செய்த நேரம்:2014-04-09 11:48:41

நாமகிரிப்பேட்டை, :தேர்தல் கமிஷன் கெடுபிடியால் நாமகிரிப்பேட்டையில் நேற்று மஞ்சள் ஏலம் ரத்து செய்யப்பட்டது. தேர்தல் முடியும் வரை ஏலம் நடக்காது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் ஈரோட்டிற்கு அடுத்து நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டையில் தான் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளன. வாரந்தோறும் செவ்வாய்கிழமையன்று நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் நடக்கும். ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கம்(ஆர்.சி.எம்.எஸ்) உட்பட 16 தனியார் மண்டிகள் உள்ளன.

இந்நிலையில், நேற்று நாமகிரிப்பேட்டையில் உள்ள ஆர்.சி.எம்.எஸ். உட்பட தனியார் மண்டிகளில் மஞ்சள் ஏலம் ரத்து செய்யப்பட்டது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: ஆர்.சி.எம்.எஸ்.சில் மட்டும் வாரந்தோறும் சராசரியாக ரூ50 லட்சத்திற்கு வியாபாரிகள் மஞ்சள் வாங்கி செல்கின்றனர். தனியார் மண்டிகளில் சேர்த்தும் சுமார் ரூஒரு கோடிக்கு விற்பனை நடக்கிறது. தேர்தல் விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டதால் ஒரு நபர் ரூஒரு லட்சத்திற்கு மேல் கொண்டுவர முடியாத சூழல் உள்ளது. வாரந்தோறும் சுமார் ஒரு கோடி பணத்தை கொண்டு வருவதிலும், மண்டிகளில் கணக்கு முடிக்கவும் வியாபாரிகளுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, இந்த வாரம் மஞ்சள் ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், இதே கெடுபடி நீடித்தால், தேர்தல் முடியும் வரை ஏலம் நடப்பது சந்தேகமே. இவ்வாறு வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வறட்சியால் கருகும் தென்னை மரங்கள்**

பதிவு செய்த நேரம்:2014-04-09 11:01:12

கமுதி, : கமுதி அருகே பசும்பொன், கிழக்கு அபிராமம், ராமசாமிபட்டி, கிழாமரம், நீராவி, கரிசல்குளம், மேல முடிமன்னார்கோட்டை, கீழமுடிமன்னார்கோட்டை, திருச்சிலுவையாபுரம், புதுப்பட்டி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் 100க்கும் மேற்பட்ட ஏக்கர்களில் தென்னை சாகுபடி செய்துள்ளனர். கடந்த 2 ஆண்டுகளாகவே இப்பகுதியில் பருவமழை முற்றிலும் பொய்த்து விட்டது.

கடும் வறட்சி காரணமாக போதிய தண்ணீர் இல்லாமல் இப்பகுதிகளில் தென்னை மரங்கள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் மிகுந்த வேதனையில் உள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், “கடந்த 5 ஆண்டுகளாகவே மாவட்டத்தில் சராசரி மழையளவு குறைந்து விட்டது. அதிலும் கடந்த 2 ஆண்டுகளாக முற்றிலும் மழை இல்லை. தொடர்ந்து ஆண்டுக்கணக்காக போதிய தண்ணீர் கிடைக்காமல் தென்னை மரங்கள் பலமிழந்து விட்டன. தென்னை மரங்கள் ஓரளவு வறட்சியை தாங்கும் தன்மை உடையது என்றாலும், அவசியமான அளவு குறைந்தபட்ச தண்ணீர் கூட 2 ஆண்டுகளாக

கிடைக்கவில்லை. இதனால் மரங்களில் காய்ப்பு திறன் வெகுவாக குறைந்து விட்டது. தற்போது தென்னை மரங்கள் கருகி வருகின்றன. எங்களுக்கு அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசு தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என்றனர்.

**தேவை அதிகரிப்பால் வெற்றிலை விலை உயர்வு**

பதிவு செய்த நேரம்:2014-04-09 11:48:28

பரமத்தி வேலூர், :பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. வெள்ளைக்கொடி ரகம்

ரூ3500க்கு

விற்பனை செய்யப்பட்டது.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்டம் வெங்கரை, குச்சிப்பாளையம், பாண்டமங்கலம், வேலூர், அணிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, பொய்யோரி, குப்புச்சிப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை சாகுபடி நடைபெற்று வருகிறது. இங்கு அறுவடை செய்யப்படும் வெற்றிலையை பரமத்தி வேலூர் நான்கு ரோட்டில் நடைபெறும் ஏலச்சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். கரூர், மதுரை, திண்டுக்கல், தேனி, ஒட்டன்சத்திரம், ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், நாமக்கல் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வியாபாரிகள் வந்து வெற்றிலையை வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த வாரம் கற்பூரி முதல் ரகம் வெற்றிலை

ரூ2000க்கும்,

இரண்டாவது ரகம்

ரூ1700க்கும்

ஏலம் போனது. அதேபோல் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம்

ரூ3500க்கும்,

இரண்டாவது ரகம்

ரூ2800க்கும்

ஏலம் போனது. இந்த வாரம் கற்பூரி வெற்றிலை முதல் ரகம்

ரூ2500க்கும்,

இரண்டாவது ரகம்

ரூ2300க்கும்

ஏலம் போனது. வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம்

ரூ3500க்கும்,

இரண்டாவது ரகம்

ரூ3000க்கும்

ஏலம் போனது. பல்வேறு இடங்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் மற்றும் திருவிழாவையொட்டி தேவை அதிகரித்துள்ளதால், வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**தேயிலை தோட்டத்தை முகாமிடும் காட்டெருமைகளால் மக்கள் அச்சம்**

பதிவு செய்த நேரம்:2014-04-10 11:07:41

குன்னூர், : குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் வனவிலங்குகள் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வனப்பகுதியினுள் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் அங்கு ள்ள குளம், குட்டைகள் அனைத்தும் வற்றியுள்ளன.

இதனால் போதிய உணவின்றி தண்ணீரை தேடி வனத்தை விட்டு வெளியேறும் வனவிலங்குகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், குன்னூர் அருகேயுள்ள சட்டன் பகுதியில் மழை வரும் என எதிர்பார்த்து அங்குள்ள விவசாயிகள் தேயிலை தோட்டங்களை கவாத்து செய்துள்ளனர்.

இதில் நிலத்தில் ஈரப்பதம் குறைந்துள்ளதால் செடிகள் காயத்துவங்கி உள்ளன. இந்நிலையில் குட்டிகளுடன் கூடிய காட்டெருமை கூட்டம் தேயிலை தோட்டத்திற்குள் முகாமிட்டு அங்குள்ள செடிகளை சேதப்படுத்தியதுடன் அவ்வப்போது சாலைகளுக்கும் வந்து செல்வதால் வாகன ஓட்டுநர்களும் பெரும் அச்சத்தில் உள்ளனர். எனவே இப்பகுதியில் முகாமிட்டுள்ள காட்டெருமைகளை அடர்ந்த வனப்பகுதியினுள் விரட்டி அடிக்க வேண்டுமென பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

**கடும் வறட்சியால் படுத்தி?எடுத்து?விட்டது?பருத்தி விளைச்சல் குறைவால் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நேரம்:2014-04-09 11:08:27

ஆண்டிபட்டி,: ஆண்டிபட்டி மற்றும் சுற்று வட்டாரப்பகுதியில் நடப்பாண்டு மழையில்லாததால் பருத்தி மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு இழப்பீடு வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஆண்டிபட்டி பகுதியில் முதலக்கம்பட்டி, சங்கரமூர்த்திபட்டி, வைகை அணை உள்ளிட்ட இடங்களில் பருத்தி விவசாயம் 400 ஏக்கரில் நடந்து வருகிறது.

கடந்த 2013, அக்டோபரில் பயிரிடப்பட்ட பருத்தி தற்போது தை மாதத்தில் விளைச்சலுககு வந்துள்ளது. பருவமழை பெய்ய தவறியதால் விளைச்சல் பருவத்தில் உள்ள பருத்தி செடியில் பூக்கள் சரிவர பூத்து காய்கள் பிடிககவில்லை. ஒரு செடிக்கு 150 முதல் 200 காய்கள் பிடிகக வேண்டும் ஆனால் போதிய தண்ணீர் பாய்ச்ச முடியாததால் 15 முதல் 20 பிஞ்சுகளே ஒரு செடியில் பிடித்துள்ளன. இதனால் நடப்பாண்டு பருத்தி விளைச்சல் கடும் சரிவை சந்தித்துள்ளது. விளைச்சல் பாதியாக குறைந்துள்ளதால் விவசாயிகள் கடும் நஷ்டமடைந்துள்ளனர்.

செடிக்கு உரம் வைத்தல், பூச்சிமருந்து அடித்தல் உள்ளிட்ட விவசாய பராமரிப்பு செலவு கூட தேறுமா என்ற நிலை உள்ளது. கடனை வாங்கி செய்த விவசாயம் காலை வாரி விட்டதே என்ற கவலையில் விவசாயிகள் உள்ளனர். எனவே மறு விவசாயம் செய்ய

வழியின்றி உள்ள விவசாயிகளுக்கு அரசு ஒரு ஏக்கருககு ரூ.2,000 இழப்பீடு வழங்க வேண்டும். தேசிய வங்கிகள் மூலம் மானியத்துடன் கடனுதவி வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளை கணக்கெடுத்து காலம் தாழ்த்தாமல் நிவாரண உதவி வழங்க வேண்டுமென தமிழக அரசை ஆண்டிபட்டி பகுதி விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்

இதுகுறித்து விவசாயி ரஜினிமுருகன் கூறுகையில், ‘நடப்பாண்டு கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் வேளாண்துறை மற்றும் வருவாய்த்துறை மூலம் வறட்சியை மதிப்பீடு செய்து அரசு உடனடி நிவாரணம் வழங்க வேண்டும்’ என்றார்.

**சின்னமனூர் பகுதியில் ஆழ்குழாய் பாசனத்தில் நெல்?நடவு பணி துவக்கம் எந்த போகத்திலும் சேராதாம்**

பதிவு செய்த நேரம்:2014-04-09 11:08:19

சின்னமனூர்,: இருபோகங்கள் கைவிட்டாலும் சின்னமனூர் பகுதியில் ஆழ்குழாய் பாசனத்தில் சில விவசாயிகள் நெல் நடவு செய்து வருகின்றனர்.

சின்னமனூர் பகுதியில் வேம்படிகளம், கருங்கட்டான்குளீளம், முத்துலாபுரம் விலக்கு, சீலையம்பட்டி, மார்க்கயன்கோட்டை, குச்சனூர், கு.துரைச்சாமிபுரம் என 4 ஆயிரம் ஏக்கர் பரப்பில் வருடத்தில் இருபோகம் நெல் சாகுபடி விவசாயம் நடந்து வருகிறது.

இதற்கு முல்லை பெரியாற்று பாசனமே பிரதானமாக உள்ளது. வருடத்தில் ஜூன் 1ம் தேதி அணையில் தண்ணீர் திறக்கப்படுவதால் தொடர்ந்து இருபோகங் களும் சாகுபடி செய்து ஜனவரியில் நிறைவு செய்வது வழக்கம்.

பருவமழை பொய்த்து பெரியாறு அணையில் நீர்மட்டம் குறைந்ததால் இருபோகங்களிலும் விளைச்சல் கடும் பாதிப்படைந்தது. இரண்டாவது போகத்தின் நிலையை கேட்கவே வேண்டாம்.

ஆற்று நீர் கைவிட்டாலும், ஆழ்குழாய் பாசனம் கைவிடாது என்ற நம்பிக்கையில் தற்போது மார்க்கயன்கோட்டை பகுதி விவசாயிகள் மீண்டும் நெல் நடவு பணியை

துவக்கி உள்ளனர். கடந்த 2 நாட்களாக களையெடுக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆழ்குழாய் பாசனம் மூலம் விவசாயம் செய்யப்படுவதால் இது எந்த போகத்திலும் சேராது. விளைந்தால் மட்டுமே யோகம் என்று விவசாயிகள் வேடிக்கையாக குறிப்பிடுகின்றனர்.

**கடும் வறட்சியால் கருகும் வெற்றிலைகள் கவலையில் விவசாயிகள்**

பதிவு செய்த நேரம்:2014-04-09 11:06:34

திருப்புவனம், : திருப்புவனம் பகுதியில் கடும் வறட்சி காரணமாக வெற்றிலை செடிகள் கருகி வருகின்றன. திருப்புவனம், பூவந்தி, நயினார்பேட்டை, நெல்முடிகரை உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை விவசாயம் செய்யப்படுகிறது. நாட்டு வெற்றிலை, கற்பூரம், சிறுகாமணி என மூன்று ரகங்கள் இப்பகுதியில் பயிரிடப்படுகின்றன. முதலில் அகத்தி நடவு செய்யப்பட்டு வளர்ச்சியடைந்தவுடன் வெற்றிலை நடவு செய்யப்படுகிறது. ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை செலவு செய்கின்றனர். நெல் நடவு செய்த விவசாயிகளிடம் இருந்து குத்தகை முறையில் நிலத்தை வாங்கி வெற்றிலை பயிரிடுகின்றனர். நடவு செய்து 5வது மாதத்தில் இருந்து வெற்றிலை அறுவடை நடைபெறுகிறது.

மாதத்திற்கு ஒருமுறை வெற்றிலை பறிக்கப்படுகிறது. நன்றாக விளையும் காலங்களில் ஏக்கருக்கு 200கிலோ முதல் 300கிலோ வரை கிடைக்கும். சாதாரண நாட்களில் கிலோ ரூ.30 முதல் 50 வரையிலும், கல்யாண முகூர்த்த நாட்களில் கிலோ ரூ.200 வரை விலை போகும். வெற்றிலைச் செடிக்கு பொதுவாக ஈரப்பதம் இருந்து கொண்டே இருக்க வேண்டும், அப்போதுதான் விளைச்சல் நன்றாக இருக்கும். இந்தாண்டு கோடை பிப்ரவரி மாதமே தொடங்கி விட்டபடியால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் இரவு நேரத்தில் விவசாயிகள் தோட்டத்திலேயே இருந்து தண்ணீர் ஊற்று ஊறவும் மோட்டாரை இயக்கி தண்ணீர் பாய்ச்சுகின்றனர்.

விவசாயி சப்பாணி கூறுகையில், ‘ஊற்றில் தண்ணீர் வற்றி விட்டது. எனவே தண்ணீர் ஊறவும் மோட்டார் இயக்குவோம். அரைமணி நேரத்தில் தண்ணீர் காலியாகிவிடும், மறுபடியும் காத்திருந்து தண்ணீர் பாய்ச்சி வருகிறோம். மற்ற விவசாயத்திற்கு இன்சூரன்ஸ் உண்டு. ஆனால் வெற்றிலைக்கு இன்சூரன்ஸ் கிடையாது என்பதால் மிகவும் வறுமையில் வாடுகிறோம்’ என்றார்.

**சங்கராபுரம் பகுதியில் வெள்ளரி பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நேரம்:2014-04-09 11:18:54

சங்கராபுரம்,: விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் பகுதி அதிக விலை நிலங்களை கொண்ட பகுதியாகும். இந்தப்பகுதியில் வறட்சி காலத்திற்கு ஏற்றவாறு பயிரிடும் விவசாயிகள் அதிக அளவில் உள்ளனர். வெயில் காலத்தில் வறட்சியை போக்குவதில் முக்கிய பங்காற்றும் வெள்ளரியை சங்கராபுரம் அடுத்த மேலேரியில் பயிரிடுகின்றனர்.

குறைந்த செலவில் தினந்தோறும் வருவாய் தரக்கூடிய பயிராக வெள்ளரி உள்ளது. வெயில் காலங்களில் அதிக அளவில் விற்பனையாகின்ற வெள்ளரியை பயிரிட்டு லாபத்தை ஈட்டி வருகின்றனர். இதுகுறித்து வேளாண்மை ஆலோசகர் முருகன் கூறுகையில், கோடைகாலத்துக்கு ஏற்ற பயிராக உள்ளது. குறைந்த செலவில் தினந்தோறும் வருமானம் தரக்கூடியதாகவும் உள்ளது. ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ வெள்ளரி விதை போதுமானது. மாதத்திற்கு இரண்டு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. இரண்டு முறை களை எடுக்க வேண்டும். அதன் பின்னர் வெள்ளரி பூ பூத்து காய் காய்க்க தொடங்கும். ஒருமாத வெள்ளரி காய்களை அறுவடை செய்யலாம். இதனை மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. குறைந்த செலவில் அதிக லாபம் தரக்கூடிய பயிராக உள்ளதால் இதனை பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

**தேவை அதிகரிப்பால் வெற்றிலை விலை உயர்வு**

பதிவு செய்த நேரம்:2014-04-09 12:13:28

பரமத்தி வேலூர், : பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. வெள்ளைக்கொடி ரகம் ரூ3500க்கு விற்பனை செய்யப்பட்டது. நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்டம் வெங்கரை, குச்சிப்பாளையம், பாண்டமங்கலம், வேலூர், அணிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, பொய்யோரி, குப்புச்சிப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை சாகுபடி நடைபெற்று வருகிறது. இங்கு அறுவடை செய்யப்படும் வெற்றிலையை பரமத்தி வேலூர் நான்கு ரோட்டில் நடைபெறும் ஏலச்சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். கரூர், மதுரை, திண்டுக்கல், தேனி, ஒட்டன்சத்திரம், ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், நாமக்கல் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வியாபாரிகள் வந்து வெற்றிலையை வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த வாரம் கற்பூரி முதல் ரகம் வெற்றிலை ரூ2000க்கும், இரண்டாவது ரகம் ரூ1700க்கும் ஏலம் போனது. அதேபோல் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ3500க்கும், இரண்டாவது ரகம் ரூ2800க்கும் ஏலம் போனது. இந்த வாரம் கற்பூரி வெற்றிலை முதல் ரகம்

ரூ2500க்கும், இரண்டாவது ரகம் ரூ2300க்கும் ஏலம் போனது. வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ3500க்கும், இரண்டாவது ரகம்

ரூ3000க்கும் ஏலம் போனது. பல்வேறு இடங்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் மற்றும் திருவிழாவையொட்டி தேவை அதிகரித்துள்ளதால், வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி 77 லட்சம் பொதிகளாக குறையும் அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு**

பதிவு செய்த நாள் : Apr 10 | 01:00 am



புதுடெல்லி

இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி எதிர்வரும் 2014–15 பருவத்தில் (ஆகஸ்டு – ஜூலை) 23 சதவீதம் குறைந்து 77 லட்சம் பொதிகளாக குறையும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. பருத்தி உற்பத்தி குறையும் என்பதால் உள்நாட்டில் தேவைப்பாடு அதிகரிக்கும். இதன் காரணமாக ஏற்றுமதி குறைய வாய்ப்புள்ளது.

<u>உற்பத்தி மதிப்பீடு</u>

சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நடப்பு 2013–14 பருவத்தில் (ஆகஸ்டு – ஜூலை) உற்பத்தி 3.72 கோடி பொதிகளாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. 2014–15 பருவத்தில் இது 3.60 கோடி பொதிகளாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு பருவத்தில் 1 கோடி பொதிகள் ஏற்றுமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை 88 லட்சம் பொதிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இனி உற்பத்தி குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளதால் உள்நாட்டில் சப்ளை கடுமையாக

பாதிக்கும். எனவே, அடுத்த சந்தை பருவத்தில் ஏற்றுமதி குறையும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.

இருப்பினும், பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் வியட்நாம் உள்ளிட்ட தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இந்தியா தொடர்ந்து பருத்தி ஏற்றுமதி செய்யும். அதேசமயம், இந்தியாவின் ஏற்றுமதியை நிர்ணயிக்கும் சக்தியாக சீனா இருக்கும் என அமெரிக்க அமைப்பு தெரிவித்துள்ளது.

ஏற்றுமதி கட்டுப்பாடு

உள்நாட்டு ஜவுளி துறைக்கு பருத்தி சப்ளை குறையும் பட்சத்தில் பருத்தி ஏற்றுமதியை குறைக்கும் நோக்கத்துடன் கட்டுப்பாடுகளை இந்திய அரசு விதிக்கும் என அமெரிக்க விவசாய துறை தெரிவித்துள்ளது.

**கடந்த நிதி ஆண்டில் யூரியா இறக்குமதி 12% குறைந்தது**

பதிவு செய்த நாள் : Apr 10 | 01:00 am



புதுடெல்லி

கடந்த நிதி ஆண்டில் (2013–14) யூரியா உரம் இறக்குமதி 12 சதவீதம் குறைந்து 71 லட்சம் டன்னாக உள்ளது. முந்தைய நிதி ஆண்டில் 80 லட்சம் டன்னுக்கும் சற்று அதிகமாக யூரியா இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

பொதுத்துறை நிறுவனங்கள்

மத்திய அரசு சார்பில் இந்தியன் பொட்டாஷ், எம்.எம்.டி.சி. மற்றும் எஸ்.டி.சி. ஆகிய பொதுத் துறை நிறுவனங்கள் யூரியாவை இறக்குமதி செய்கின்றன. ஓராண்டில் நமக்கு 3.30 கோடி டன் யூரியா தேவைப்படுகிறது. ஆனால் உற்பத்தி 2.20 கோடி டன் என்ற அளவில்தான் உள்ளது. எனவே தேவைப்பாட்டை ஈடு செய்யும் வகையில் யூரியா அதிக

அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. மார்ச் 31–ந் தேதியுடன் நிறைவடைந்த நிதி ஆண்டில் இந்தியன் பொட்டாஷ் நிறுவனம் 25.40 லட்சம் டன்னும், ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் 7.40 லட்சம் டன்னும் யூரியா இறக்குமதி செய்துள்ளன. எனினும் முந்தைய ஆண்டை விட இந்த நிறுவனங்கள் குறைவாக இறக்குமதி செய்துள்ளன.

அதே சமயம் எம்.எம்.டி.சி. நிறுவனத்தின் இறக்குமதி 5.40 லட்சம் டன்னிலிருந்து மூன்று மடங்கிற்கு மேல் உயர்ந்து 17 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. ஓமனில் உள்ள ஓமிஃப்கோ நிறுவனம் வாயிலாகவும் யூரியா இறக்குமதி செய்யப்படுகிறது. இது இஃப்கோ, கிரிப்கோ மற்றும் ஓமன் ஆயில் கம்பெனி ஆகியவற்றின் கூட்டு நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் வாயிலாக வாங்கப்பட்ட யூரியாவும் 18.30 லட்சம் டன்னிலிருந்து 21.20 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

நடப்பு பருவத்தில் (2013 ஜுலை–2014 ஜுன்) தென்மேற்கு பருவமழை சிறப்பாக இருந்ததால் சாகுபடி பரப்பளவு கணிசமாக விரிவடைந்தது. இதனால் யூரியா உரத்திற்கான தேவைப்பாடும் அதிகரித்திருந்தது. எனினும் கடந்த ஆண்டில் கையிருப்பு அதிகமாக இருந்ததால் இறக்குமதிக்கான தேவையும் குறைந்துள்ளது. நம் நாட்டில் யூரியா உரம்தான் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. யூரியா விலையை மட்டும் மத்திய அரசு நிர்ணயிக்கிறது. மற்ற உரங்களைப் பொறுத்தவரை சத்து சார்ந்த மானியக் கொள்கை அமல்படுத்தப்பட்டுள்ளது.

சில்லறை விற்பனை விலை

தற்போது சில்லறை விற்பனையில் ஒரு டன் யூரியா விலை ரூ.5,360 என்ற மானிய விலையில் வழங்கப்படுகிறது. அதாவது உற்பத்திச் செலவிற்கும், அதிகபட்ச சில்லறை விலைக்கும் இடையிலான வித்தியாசத்தை உர நிறுவனங்களுக்கு மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. என்றாலும், கடந்த பல ஆண்டுகளாக விலையில் மாற்றம் செய்யப்படாதிருப்பதால், யூரியா உரத்திற்கான சில்லறை விலையை உயர்த்த வேண்டும் என மத்திய உர அமைச்சகம் விரும்புகிறது.

**முறையாக பாதுகாக்கப்படாமல் 40 சதவீத உணவு தானியங்கள் அசோசெம்–யெஸ் பேங்க் ஆய்வில் தகவல்**

பதிவு செய்த நாள் : Apr 10 | 01:00 am



புதுடெல்லி

முறையான பாதுகாப்பின்றி 40 சதவீத உணவு தானியங்கள் இருப்பதாக அசோசெம்– யெஸ் பேங்க்கின் அண்மைக் கால ஆய்வறிக்கை ஒன்று கவலை தெரிவித்துள்ளது. சேமிப்புக் கிடங்குகளில் 3.50 கோடி டன் அளவிற்கு கூடுதல் கொள்ளளவு தேவையாக உள்ளதே இதற்கு காரணம் என ஆய்வறிக்கை கூறியுள்ளது.

<u>கொள்ளளவு</u>

நம் நாட்டில் தற்போதுள்ள சேமிப்பு கிடங்கு வசதியில் 70 சதவீதம் மத்திய, மாநில அரசுகளுக்கு சொந்தமானவை. இந்த சேமிப்புக் கிடங்குகளில் 11.20 கோடி டன் உணவு தானியங்களை சேமிக்க முடியும். இந்த நிலையில், பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012 ஏப்ரல் – 2017 மார்ச்) மேலும் 3.50 கோடி டன் தானியங்களை சேமிக்கும் வகையில் கொள்ளளவு உயர்த்தப்பட வேண்டும் என அசோசெம் தெரிவித்துள்ளது.

ஆய்வறிக்கை மேலும் கூறுவதாவது–

கொள்முதல் பருவத்தின் உச்சக்கட்டத்தில் 30–40 சதவீத உணவு தானியங்கள் முறையற்ற வகையில் சேமிக்கப்படுகிறது. எனவே தானிய கிடங்குகளை நவீன விஞான முறைகளில் தரம் உயர்த்த வேண்டியது அவசரத் தேவையாக உள்ளது. போதிய அளவு சேமிப்புத்திறன் இல்லாததாலும், சரக்குப் போக்குவரத்து வசதிகள் இல்லாததாலும் 20–30 சதவீத உணவு தானியங்கள் வீணாகிறது.

இந்தியாவின் மொத்த சேமிப்பு கிடங்கு வசதியில் 12 சதவீதம் மட்டுமே வேளாண் விளைபொருள்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள இடம் தொழில்துறையின்

உற்பத்திப் பொருட்களை பாதுகாக்கவே பயன்படுத்தப்படுகிறது. சேமிப்புக் கிடங்குகளுக்கு அதிக தேவை உள்ளதால் இப்பிரிவு ஈட்டும் வருவாய் ஆண்டுதோறும் சராசரியாக 9 சதவீத வளர்ச்சி கண்டு வருகிறது. 2015–16–ஆம் நிதி ஆண்டில் இப்பிரிவில் ஈடுபட்டுள்ளோரின் வருவாய் ரூ.35 ஆயிரம் கோடியை தாண்டும்.

<u>உணவு பாதுகாப்பு</u>

சேமிப்புக் கிடங்குகள்தான் வர்த்தகம் மற்றும் விவசாய விளைபொருள்களை பதப்படுத்தும் துறைக்கு முதுகெலும்பாக விளங்குகின்றன. விளைபொருள்களை சப்ளை கட்டமைப்பை வலுப்படுத்துகின்றன. உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலையான விலையை உறுதி செய்கின்றன. சாதாரண காலங்களில் அத்தியாவசியப் பொருட்களின் தங்கு தடையற்ற சப்ளைக்கும் துணைபுரிகின்றன.

இவ்வாறு அசோசெம்–யெஸ் பேங்க் ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

**நீலகிரி**

**ஏற்றுமதி குறைந்ததால் தேயிலை விலை கடும் சரிவு**

பதிவு செய்த நாள் : Apr 10 | 02:39 am



குன்னூர்,

ஏற்றுமதி குறைந்ததால் தேயிலை விலை கடுமையாக சரிவடைந் தது.

தேயிலை விவசாயம்

நீலகிரி மாவட்டத்தில் முக்கிய விவசாய தொழிலாக தேயிலை சாகுபடி மேற் கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள சுமார் 60 ஆயிரம் தேயிலை சிறு விவசாயிகள் தங்கள் தோட்டங் களில் தேயிலை செடிகளை நடவு செய்து தேயிலை விவ சாயத்தில் ஈடுபட்டு வருகி றார்கள்.

தென்னிந்தியாவில் நீலகிரி மாவட்டத்தில் தான் சிறு தேயிலை விவசாயிகள் அதிகம் இருப்பதாக புள்ளி விவரம் கூறுகிறது. மாவட்டத்தில் உள்ள சிறு விவசாயிகள் 200-க் கும் மேற்பட்ட சிறு தேயிலை தொழிற்சாலைகளுக்கு தங்கள் தோட்டங்களில் இருந்து அறுவடை செய்யும் பச்சை தேயிலையை வினியோகம் செய்து வருகின்றனர்.

மாத விலை நிர்ணயம்

இவ்வாறு வினியோகம் செய்யப்படும் பச்சை தேயி லைக்கு மாத விலை என்றும், வார விலை என்றும் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங் கப்படுகிறது. கடந்த மார்ச் மாதத்தில் சிறு தேயிலை தொழிற்சாலைக்கு வினி யோகம் செய்யப்பட்ட பச்சை தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.13 வழங்கப்பட்டது.

கடந்த பிப்ரவரி மாத விலையாக கிலோ ஒன்றுக்கு 13 ரூபாய் 50 காசு வழங்கப் பட்டது. கடந்த சில மாதங் களாக ஏற்றுமதி குறைவின் காரணமாக ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு விலை கடுமையாக சரிந்து வரு கிறது.

தேயிலை தூள் விலை குறைவு

வட இந்திய தேயிலை வர்த்தகர்களும் ஆர்வமுடன் தேயிலை தூளை வாங்குவ தில்லை. தேயிலை தூளுக்கு ஏற்பட்ட விலை குறைவு பச்சை தேயிலையின் விலை யிலும் எதிரொலிக்கிறது. தற் போது மழை இல்லாத கார ணத்தால் தேயிலை மகசூல் குறைவடைந்ததோடு தரமான தாகவும் பறிக்க முடிவ தில்லை.

இது குறித்து உபதலையை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது:-

கடந்த மார்ச் மாதம் வழங்கிய பச்சை தேயிலை கிலோவுக்கு ரூ.13 விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. தற்போது மழை இல்லாமல் உள்ளதால் பச்சை தேயிலை அறுவடை யும் குறைவாக உள்ளது. மழை இல்லாத காரணத்தால் தரமான பச்சை தேயிலையை அறுவடை செய்ய முடிய வில்லை.

விவசாயிகள் கவலை

இது தேயிலை தூள் ஏலத்திலும் எதிரொலிக் கிறது. எதிர்வரும் காலங்களில் தரமான தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கும் என்று கூறப்படுகிறது. சாதாரண வகை தேயிலைகளுக்கு விலை குறைவு ஏற்படும் அபாயம் உள்ளது. இருப் பினும் பச்சை தேயிலை விலை குறைவினால் விவசாயிகளின் எதிர்காலம் கேள்வி குறியாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.